**இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தேசீய நெடுஞ்சாலைகள் விரிவாக்க திட்டத்தின் கீழ் தேசீய நெடுஞ்சாலை எண் 47–ல் கிட்டாம்பாளையம் (கோவை மாவட்டம்) முதல் வாளையார் வரை 6 மற்றும் 4 வழிச் சாலை அமைத்தல் மற்றும் விரிவாக்கம் திட்டத்திற்கான மக்கள் கேட்புரைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் S.R.S. திருமண மண்டபம் , கலங்கல் சாலை , சூலூர், கோவை மாவட்டத்தில் 30.12.2009 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| முன்னிலை | : | டாக்டர்.பி. உமாநாத், இ.ஆ.ப.<br>மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டம். |
| நடத்துனர் | : | க.காமராஜ்,<br>மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோவை. |
| திட்டத்தின் பிரதிநிதி | : | திரு. ப.மணிவண்ணன்,<br>திட்ட இயக்குநர்,<br>இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்,<br>கோவை. |
| பங்கு பெற்றோர் | : | பங்கு பெற்றோர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. |

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், கேட்புரைக் கூட்டத்தி ற்காக வந்துள்ள கிராம மற்றும் நகர பொதுமக்களையும் மற்றும் பத்திரிகையாளர்களையும் வரவேற்றார். இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 22.12.2008 தேதியிட்ட கடிதத்தின் படியும் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ன் படியும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நெடுஞ்சாலைகள் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் உள்ள கிட்டாம்பாளையம் முதல் வாளையார் (கி.மீ.100.000 முதல் 182.250 வரை) வரையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை
47–னை 4/6 வழி சாலையாக மாற்றுதல் சம்பந்தமாக பொதுமக்கள் கேட்புரைக் கூட்டமானது 30.12.2009 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் கோவை மாவட்டம் சூலூரில் உள்ள SRS கல்யாண மண்டபத்தில் நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த திட்டம் மிக மிக முக்கியமான நல்லதொரு திட்டம். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நம் நாட்டின் சாலை மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் செயல்பட்டு வருகிறது. அதன் முதல் கட்டமாக தங்க நாற்கர சாலை திட்டத்தின் கீழ் டில்லி, மும்பை, கல்கத்தா, சென்னை

ஆகிய முக்கிய நகரங்களை இணைத்துள்ளது. மேலும் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளையும் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளையும் நான்கு மற்றும் ஆறு வழி சாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை இந்திய தேசீய நெடுஞ்சாலை ஆணையம் தொழில் வல்லுநர்களான வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் அவர்கள் உதவியுடன் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயார் செய்துள்ளது. இத்திட்டத்தினால் ஏற்படக் கூடிய சுற்றுச் சூழல் பாதிப்பு , அதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையும் இந்த அறிக்கையால் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தினால் பொதுமக்களுக்கு சுற்றுச் சூழலினால் ஏற்படும் பாதிப்பு ம ற்றும் பிற கருத்துகளை இக்கூட்டத்தில் தெரிவிக்கலாம். தங்கள் கருத்து இதற்குமுன் இவ்வறிக்கையில் இடம் பெறாவிட்டால் அதனை ஆராய்ந்து இவ்வறிக்கையில் சேர்ப்பது பற்றி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து தேசீய நெடுஞ்சாலை ஆணையத்தின் கோவை திட்ட செயலாக்கப் பிரிவின் திட்ட இயக்குநர் அவர்கள் இந்தத் திட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 47–ல் செங்கப்பள்ளி (100+000) முதல் வாளையார் (182+250) வரை , அதாவது முக்கியமான நகர்புறங்களாகிய பெருமாநல்லூர், அவிநாசி, கருமத்தம்பட்டி, நீலாம்பூர், மதுக்கரை மற்றும் கே.ஜி.சாவடி வரை இத்திட்டச்சாலை அமையவுள்ளது. கோவை மாவட்டத்தில் இத்திட்டம் கிட்டாம்பாளையம் கிராமத்தில் துவங்குகின்றது. இத்திட்டத்தை மிகவும் சிறந்த திட்டமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து இந்திய தேசீய நெடுஞ்சாலை ஆணையத்தின் வல்லுநர்களான வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ் அவர்கள் திட்டத்தினைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மேற்படி நான்கு வழி சாலை போடப்படுவதால் விவசாய நிலங்கள், வீடுகள், குடிநீர் நிலைகள் , குளங்கள் , மரங்கள் போன்றவை பாதிக்கப்படுகிறன்றன. அந்த இழப்பை ஈடு செய்ய ஏதுவாக கீழ்கண்ட நடவடிக்கைகளை தேசீய நெடுஞ்சாலை ஆணையம் எடுக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1. மரங்கள் – ஒரு மரம் வெட்டப்படுவதாக இருந்தால் , மாற்று இடத்தில் மூன்று மரங்கள் நடப்படும்.
2. வீடுகள், கடைகள், நிலம் – முறையான நஷ்ட ஈடு கொடுத்தல்.
3. குளங்கள் , நீர் நிலைகள் – பாதிப்பு ஏற்படாத மற்ற குளங்களை முறையாக பராமரித்தல், பாதிக்கப்பட்ட குளங்களின் கொள்ளளவு பாதிக்காத வகையில் ஆழப்படுத்துதல்.
4. சுற்றுப்புற காற்று, – அதிக மாசு நிறைந்த இடங்களில் மரங்களை நடுதல்
   சப்தத்தின் தன்மை – வாகனங்களின் பராமரிப்பை அதிகரித்தல்.

5. வழிபாட்டு தலங்கள் மாற்றி அமைத்தல் – மாற்றப்படும் இடங்களை முறையாக உருவாக்குதல்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது திட்ட சாலையை ஒட்டியும், புறவழிச்சாலைக்காக 261.316 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் இத்திட்ட மதிப்பீட்டால் சுற்றுச் சூழல் மேலாண்மைக்காக ரூ.6.85 கோடியும், நிலக் கையடக்கம் மற்றும் மறுவாழ்விற்காக ரூ.150.84 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

<u>பொது மக்கள் கருத்து:</u>

<u>திரு.சு. பழனிச்சாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர், கருமத்தம்பட்டி</u>

இந்தத் திட்டம் அமைவதால் சாலையின் இருபுறமும் உள்ள விவசாய நிலம் பாதிக்கப்படும் என்றும் மற்றும் வாகன போக்குவரத்தினால் அதிகமான ஒலி மாசு ம ற்றும் புகை ஏற்படக்கூடும் என்றும் அதிக வாகன விபத்துகள் ஏற்படக் கூடும் அபாயம் உள்ளதாகவும் , மேலும் ஏற்கனவே உள்ள நான்கு வழிச் சாலையாகிய கருமத்தம்பட்டியில் வாகனத்தின் புகை மிக மிக கருமையாகவும், வாகன நெரிசல் அதிகமாக உள்ளதால் முக்கியமாக பெண்கள் இருசக்கர வாகனங்களில் செல்லும்பொழுது விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றது. ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலையை சரிவர பராமரிக்காமல் குண்டும் குழியுமாக உள்ளது. எனவே முதலில் அந்தச் சாலையை சரி செய்து விட்டு பிறகு இத்திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 6 மற்றும் 4 வழிச் சாலைத் திட்டம் செயல்படுத்துவதால் விவசாய நிலம் பாதிப்படையாமல் இருப்பதற்கு சாலையின் இரு ஓரங்களிலும் மற்றும் சாலையின் நடுவிலும் மரங்கள் நடப்பட்டு பாதுகாக்கப்படும். மேலும் இத்திட்டத்தில் சொல்லப்பட்டவாறு தேசீய நெடுஞ்சாலை ஆணையம் கடைபிடிக்கும்போது விளைநிலங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. குண்டும் குளியுமாக உள்ள தேசிய நெடுஞ்சாலையை வருகிற ஜூன் மாதத்திற்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

<u>வழுக்குப்பாறை பாலசுப்ரமணியன், விவசாய சங்கத் தலைவர்</u>

இந்தத் திட்டத்தினால் இதற்கு முன்பு இருந்ததை விட அதிக வாகனங்கள், வாகன புகை, விபத்து 4 மற்றும் ஆறு வழிச் சாலை அமைவதால் மூன்று மடங்கு நான்கு மடங்கு அதிக அளவு தோரயமாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தார். மேலும் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று கருத்து தெரிவித்தார். இத்திட்டம் அமைவதால் திருப்பூர் பல்லடம் வழியாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் இச்சாலை வழியாக செல்வதால் புகை அதிகமாகி, மாசு ஏற்பட வாய்ப்புண்டு என்றும், சாலையின் இரு புறங்களிலும் உள்ள விவசாய நிலத்தை அரசு கையகப்படுத்தும் போது அருகிலுள்ள நிலங்கள் தூசியினால் விவசாயம் பாதிக்ககூடும் , மரங்கள் அதிக அளவில் வெட்டப்படும் எனவும் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் குறுக்கிட்டு இரு வழிச் சாலையில் எந்த விதமான வாகனம் வருகிறது என்பது தெரியாது. மேலும் போக்கு வரத்து நெரிசல் ஏற்படுவதால் வாகனங்கள் மெல்ல மெல்ல செல்வதால் வாகனத்தின் புகை (emission) அதிகமாக வெளியில் செல்லும். ஆனால் ஆறு மற்றும் நான்கு வழிச் சாலை அமைவதால் வாகனங்கள் சீரான வேகத்தில் செல்லும்போது புகை குறைய அதிக வாய்ப்பு உள்ளது. மேலும் போக்குவரத்து நெரிசலும் குறைய வாய்ப்பு உள்ளது. மேலும் 4 வழிச் சாலைக்கும், வாகன எண்ணிக்கைக்கும் மற்றும் வாகனப் புகைக்கும் சம்பந்தமில்லை என்றும், விவசாய நிலம் பாதிப்படையாமல் இருப்பதற்கு கட்டாயம் மரங்கள் நடப்படும் என்றும் , இத்திட்டம் செயல்படுத்துவதால் 5000 மரங்கள் வெட்டப்படுகின்றன. அத ற்குப் பதிலாக 15,000 மரங்கள் சாலையின் இரு ஓரங்களிலும் மற்றும் சாலையின் நடுவில் 81,000 அதிக அளவு ஆக்சிஜனை வெளிவிடும் செடிகளையும் நடப்பட்டு வாகன போக்குவரத்தினால் ஏற்படும் மாசை கட்டுப்படுத்தப்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

சாலையோரம் உள்ள நிலங்கள் தூசியினால் பாதிப்பு ஏற்படாத வண்ணம் நீர் தெளிப்பான் மூலம் நீர் தெளிக்கப்படும் என்றும் திட்டம் செயல்படுத்தப்படும் போது ஏதும் குறை இருந்தால் நேரடியாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை தொடர்பு கொள்ளலாம் என திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

**திரு.நாராயணசாமி, கருமத்தம்பட்டி**

தேசிய நெடுஞ்சாலை திட்டம் அமைவது நல்லது தான். ஆனால் மேம்பாலம் கட்டும்பொழுது தண்ணீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுத்துகிறது.

Maximum Flood Level –ஐ அறிந்து அந்த அளவிற்கு மேல் தான் பாலம் கட்டப்படும் . மேலும் சுற்றுச் சூழல் பாதிப்பு அடையாமல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

**<u>திரு. கிருஷ்ணசாமி, விவசாய சங்கத் தலைவர்</u>**

வாகனங்களில் ஒலி மாசை கட்டுப்படுத்த வேண்டும். வாகனம் முன்னால் அதிக வெளிச்சத்தை குறைக்க , கருப்பு Sticker ஒட்டப்படவில்லை . இதனால் விபத்துகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மாவட்ட நிர்வாகம் கருப்பு Sticker ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்திட்டம் கிராமச் சாலை குறுக்கு இணைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் . மேலும் ஏற்கனவே உள்ள 6/4 வழிச் சாலையை பராமரிப்பு செய்ய ஒப்பந்தம் பேசி சுங்கம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

திட்ட இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் குறுக்கிட்டு இத்திட்டத்தினால் ஒலி மாசு கண்டிப்பாக குறையும். சாலையின் நடுவில் செடிகள் நடுவதால் வாகனங்களிலிருந்து வெளிவரும் Carbon di-Oxide கட்டுப்படும். மேலும் நான்கு வழிச் சாலையில் எதிராக வாகனங்கள் வரும்பொழுது செடிகள் நடுவில் இருப்பதால் Light–ன் வெளிச்சம் குறைந்து பாதுகாப்பு அதிகம் ஏற்படும் . எதிரே வரும் வாகனங்களை முந்துவதற்கான வாய்ப்புகள் கிடையாது. மேலும் இத்திட்டத்தில் Service Road அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . மத்திய அரசின் ஆலோசனைப்படி தகுந்த இடங்களில் International Level–ல் Tollgate அமைத்து சாலையை பராமரிப்பு செய்ய இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று விரிவாக எடுத்துரைத்தார்.

**<u>திரு.நாச்சிமுத்து, TVS Lotus, கருமத்தம்பட்டி</u>**

4/6 வழிச்சாலை கிராமப் புறத்தில் அமைவதால் 2 வழிச் சாலையாகிய கிராமப்புற செங்கப்பள்ளி – சேலம் நெடுஞ்சாலை திட்டம் முடிவடையவில்லை. நெடுஞ்சாலையில் Service சாலை இல்லாததால் விபத்துகள் , மரணங்கள் ஏற்படுகின்றன. 6 வழிச் சாலை கிராமப்புற சாலையில் அமைவதால் நெரிசல் ஏற்பட்டு வருகிறது. எனவே, தேசீய நெடுஞ்சாலையிலிருந்து வழியில் உள்ள கிராமங்களுக்கு செல்ல Service சாலை அமைக்க வேண்டும்.

இதற்கு திட்ட இயக்குநர் அவர்கள் இத்திட்டம் மிகச் சிறப்பான திட்டம் இத்திட்டத்தில் வழியில் உள்ள கிராமங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு விபத்துகளை தடுக்க Service சாலை அமையவுள்ளது என்று தெரிவித்தார்.

**<u>திரு.சி.அய்யாசாமி, விவசாயி</u>**

புறவழிச்சாலை எந்த எந்த இடத்தில் அமையவுள்ளது என்பதை மாவட்ட நிர்வாகம் ஒரு கூட்டத்தைக் கூட்டி , அதனால் பாதிப்பு ஏற்படுவது மற்றும் பாதிப்பு ஏ ற்படாதது பற்றி விவாதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஏற்கனவே பொதுமக்கள் கருத்தறியும் கூட்டம் தேசீய நெடுஞ்சாலை ஆணையத்தால் **7.5.2008** அன்று அவினாசி மற்றும் பெருமாநல்லூர் , **08.05.2008** அன்று கே.ஜி சாவடியிலும் நடத்தப்பட்டது. மேலும் விபரம் அறிய கோவையில் உள்ள தேசீய நெடுஞ்சாலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>டாக்டர்.என் தர்மராஜன், Government Medical Officer</u>**

NHAI திட்டம் அமைப்பது சந்தோஷம் தான். சாலை விரிவாக்கம் செய்யும் போது Service Road இல்லாததால் செங்கப்பள்ளி – சேலம் சாலையில் அதிக மரணம் ஏற்படுகிறது. முதலில் Service Road அமைத்த பின்பு **4/6** வழிச்சாலை திட்டத்தை அமல் படுத்துமாறு தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மேம்பாலம் அமைக்கும்பொழுது Pillar மூலம் மேம்பாலம் அமைப்பது நல்லது.

தொடர்ந்து திட்ட இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புதிதாக அமையவுள்ள இத்திட்டத்தில் Service Road Contract பணி மிக விரைவாக முடிக்கப்படும் எனவும் பாலங்கள் கட்டும்போது IRC விதிமுறை , தொழில் நுட்ப காரணமாகவும் திட்ட மதிப்பீடு காரணமாகவும் தான் மேம்பாலம் அமைக்கப்படுகிறது என தெரிவித்தனர்.

**<u>திரு.வேலுசாமி, அவினாசி ரோடு</u>**

இத்திட்டம் திருப்பூர் சுடுகாட்டுமயான வழியாக வருவதை மாவட்ட நிர்வாக அதிகாரி அவர்கள் கள ஆய்வு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

திருப்பூர் மாவட்டத்திற்கு என தனி பொது மக்கள் கேட்புரைக் கூட்டம் நடைபெற இருப்பதாக திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

**<u>திரு.தேவேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், அவினாசி</u>**

உண்மையயான இறுதியான திட்டம் தானா என்றுக் கேட்டார்.

திட்ட இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி 27.11.2009 .ன்படி பரிசீலனையில் உள்ளது. இது இறுதியான அறிக்கை தான் என்று கூறினார். இருப்பினும் சுற்றுச் சூழலினால் பாதிப்பு ஏதாவது ஏற்படும் என தெரிவிக்கும் பட்சத்தில் கருத்துக்களை திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என தெரிவித்தார்.

**<u>திரு.எஸ்.வேலுமணி, முத்துக்கவுண்டன்புதூர்</u>**

இத்திட்டத்தை நிறைவேற்றும்போது விவசாயிகள் நிலத்தை கையகப்படுத்து–வதற்கான இழப்பீடு உடனடியாக வழங்கப்படுமா அல்லது இனிமேல் தான் ஆய்வு செய்து இழப்பீடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டார்.

நிலத்தை இத்திட்டத்திறகாக கையகப்படுத்தும் போது இழப்பீட்டுத் தொகையை வழங்கிய பின்னர் தான் நிலத்தை கையகப்படுத்தப்படும் என திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

**<u>திரு.கே.ஆர். ஆறுமுகம், அவினாசி</u>**

போக்குவரத்து அதிகாரி மற்றும் மாவட்ட நிர்வாகம் சேர்ந்து வாகனங்களின் நெரிசல் மற்றும் ஒலி மாசு ஏற்படுவதை தடுக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

தக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

**<u>திரு.ராதாகிருஷ்ணன், அவினாசி</u>**

இத்திட்டத்தில் நிலங்களை கையகப்படுத்தும்போது விவசாயிகளின் ஒட்டுமொத்த நிலங்களையும் இழக்க வாய்ப்பு உள்ளது . எனவே Rehabilitation என்ற முறையில் இழப்பீடு செய்து தருமாறும், விவசாயிகளின் குடும்பத்திற்கு

வாழ்வாதாரம் பாதிப்பு ஏற்படாமல் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிலக் கையடக்கம் மற்றும் மறு வாழ்விற்காக ரூ.150.84 கோடி இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு நிர்ணயிக்கும் தொகையினை நில சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் என திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை அவர்கள் இக்கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துகளை தொகுத்து அளித்தார்.

இறுதியாக திட்ட இயக்குநர் அவர்கள் இத்திட்டம் இந்தியாவிலே மிக சிறந்த திட்டமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, சுற்றுச் சூழல் பாதிப்பு இல்லாதவாறும், விவசாய நிலங்களுக்கு பாதிப்பு இல்லாதவாறும், நில உரிமையாளர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் தொகையை வழங்கி பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாதவாறு அனைவரும் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார்.

இத்துடன் இக்கூட்டம் முடிவு பெற்றது.

இணைப்பு – I - பங்கு பெற்ற பொது மக்கள் விவரம்
இணைப்பு – II - எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (71 எண்ணிக்கைகள்)
இணைப்பு – III - எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்களுக்கு தேசீய நெடுஞ்சாலை ஆணையத்தின் விளக்கம்.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் ,
கோவை.

மாவட்ட ஆட்சியர்,
கோவை மாவட்டம்,
கோவை.

**Proceedings of the Public Hearing held on 30.12.2009 at 10.00 A.M in SRS Kalyanamandapam, Kalangal Road, Sulur, Coimbatore District for the Four/Six Laing of National Highways (NH-47) from Kittampalayam (Coimbatore District) to Walayar ( Km 100.000 to Km 182.250) in the State of Tamilnadu by the National Highways Authority of India.**

| | | |
|---|---|---|
| Present | : | Dr.P.Umanath, I.A.S.,<br>District Collector,<br>Coimbatore District. |
| Convenor | : | Thiru.K.Kamaraj,<br>District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Coimbatore. |
| Project Representative | : | Thiru.P. Manivannan,<br>Project Director,<br>National Highways Authority of India,<br>Coimbatore. |
| Participants | : | Participants List enclosed vide Annexure. |

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Coimbatore welcomed the District Collector, the Public and Press persons who have come to attend the Public Hearing meeting. Further, the District Environmental Engineer informed that as per the letter of Ministry of Environment and Forests, Government of India dated: 22.12.2008 and in accordance with Environmental Impact Assessment Notification 2006, the Public hearing is conducted today on 30.12.2009 for the Project of laning/widening of Four/Six roads in Tamilnadu from Kittampalayam (Coimbatore District) to Walayar (Kerala Border) under National Highways Development Project in the presence of the District Collector, Coimbatore District at SRS Kalyanamandapam, Kalangal Road, Sulur, Coimbatore to obtain public opinion about the Project .

In continuation, the District Collector has informed that this project is one of the most important Project . National Highways Authority of India is planing to convert the entire existing two lanes into four/six laning in various stages for the growth of our country's infrastructure. As per National Highways Development Project (NHDP), the Metropolitan Cities Delhi, Mumbai, Kolkata, Chennai have already been converted into 4/6 laning as per Golden Quadrilateral under

Phase - I and North-South and East – West Corridor (NSEW) under Phase – II. In addition, the action has been initiated by NHAI to convert all East, West, North and South places of India into four/six laning roads. National Highways Authority of India has appointed M/s. Wilbur Smith Associates for this Project to prepare the Environmental Impact Assessment report study. In the EIA report summary, the factors affecting the environment and suitable measures to be taken by the NHAI was clearley indicated in this project. The public are requested to give their views regarding environment concerns due to the implementation of this by the NHAI. If any valuable views are received from the public, it will be included in this Proejct, if it is not considered in the project. Then the Project Director , NHAI was requested to explain about the Project to the Public.The Project Director, National Highways Authority of India explained briefly that the project comprises the portion of NH-47 starting from (100+000 ) Chengapalli in Erode District and ending at Walayar (Kerala - Tamilnadu Border) in Coimbatore District. The proposed Project stretch passes through major towns and villages of Perumanallur, Avinashi, Thekkalur, Karumathampatti, Kaniyur, Neelambur, Madukkarai and K.G. Chavadi. This Project starts at

Kittampalayam in Coimbatore District. Then Wilbur Smith Associates, the Consultant engaged by the NHAI have explained in details about the project and also stated that due to laning of 6/4 roads , the Agricultural lands, Residences, Drinking Water sources, ponds, trees may be affected. In order to compensate the Impact, the NHAI has proposed to take the following mitigation measures.

| | | |
|---|---|---|
| 1. | Cutting of trees | - Three trees to be planted in the place of one removed. |
| 2. | Houses, shops, land | - Giving compensation/ assistance. |
| 3. | Ponds, water sources | - Maintenance will be done for the unaffected ponds and to increase the capacity of the affected ponds. |
| 4. | Ambient Air,Noise | - Tree Plantation in the highly polluted area, improving the vehicle maintenance. |
| 5. | Relocating the religious places | - Proper development of the relocate places. |

The Project Director has informed that 261.316 hectares of land will be acquired for Bye-pass Roads and widening of the existing two lane roads. In this Project a sum of Rs. 6.85 crores is allotted for Environment Management Plan and Rs. 150.84 crores is allotted for land acquisition and rehabitations.

**PUBLIC OPINION:**

**Thiru.S.Palanisamy, Former District Panchayat President, Karumatthampatti**

During Implementation of this project, Agricultural lands on two sides (ie, left and right) of the road will be affected. More noise pollution and emission will be there due to traffic of vehicles. Due to improper maintenance of roads in the existing roads in Karumathampatti, emissions

released from the vehicles are very dark , more traffic jam, especially two wheelers driven by ladies met with accident. Existing National Highways are not maintained properly. So, he informed that first to rectify the existing roads in Karumathampatti and after that this project may be implemented to avoid accident and inconvenience to the public.

The District Collector and Project Director explained that 6/4 laning roads will be implemented without affecting the Agricultural lands. For this , trees will be planted on both sides of the road to maintain green cover. While adopting the Rules and regulations in the project , there is no chance to affect the Agricultural lands. Action will be taken to rectify the existing road in Karumattampatti before end of the month June 2010.

**Vazhukkuparai Balasubramanian, President of the Agricultural Association**

He informed that due to implemtation of this project, more vehicles, vehicle emission and accidents will be caused, approximately three to four times than the existing one. Also he informed that vehicles will be more. By using this road, pollution will be caused, since all the vehicles will be diverted from Tiruppur to Palladam. During implementation of this Project the agricultural lands on both sides of the roads will be affected by dust emission, and more number of trees will be cut.

The District Collector explained that in the existing road the vehicles coming in the opposite direction are not clearly visible. Due to heavy traffic the vehicles will move slowly, which resulting in increased emission level from vehicles. But after implementation of the Project vehicles will move with steady speed, resulting less emission level and moreover less traffic. And also informed that trees will be planted to avoid agricultural land pollution. In this project 5000 trees will be cut down. NHAI assured that 15,000 trees will be planted on both sides of the roads and 81,000 High Oxygen releasing plants will be planted in the middle of the roads. It will help to reduce the pollution level due to vehicle emission.

The Project Director has informed that the water will be sprayed during Project execution to control dust fall in nearby lands so as to avoid pollution to nearby agricultural land and trees.

**Thiru.Narayanasamy, Karumathampatty**.

He welcomed the formation of the Project. He suggested to construct overbridge without any stagnation of water.

The Project Director has informed that the overbridge will be constructed above maximum flood level and proper measures has been considered to avoid environmental damage.

**Thiru.Krishnasamy, President of the Agricultural Association**

He stressed to control noise pollution due to usage of horn and head light to avoid accident. To reduce the bright light in the vehicles action to be initiated to paste black sticker on Head lights. He also stressed to connect the village roads in the main NH roads and toll to be collected as per agreement to maintain the 6/4 lanes in NH 47.

The District Collector and the Project Director has informed that after implementation of the Project the vehicles will go with normal speed and less traffic which will reduce the noise due to usage of horn. The Carbon - di - Oxide level will also get controlled due to planting of plants in the middle of the lanes. In four lanes due to the middle plantation the intensity of the light get reduced which may give more safety. There is no possible to overtaking of opposite vehicles. Moreover the service road is also planned to be constructed in this project . As per Government of India's guidance, tollgate will be constructed as per International standards to get toll to maintain the roads.

**Thiru.Nachimuthu, TVS Lotus, Karumathampatti.**

He informed that the National Highways is not having service roads. Due to this most of accidents and deaths occur. Six lanes roads mostly

pass on village roads resulting traffic. So, he stressed to provide service roads to all villages from National Highways.

The Project Director said that service roads will be provided to all villages to avoid accidents.

**Thiru.C.Ayyasamy, Agriculturist**

He stressed the District Administration to conduct a meeting to discuss the Bye Pass Road proposal , its effects and the matter related to acquisition of lands.

The Project Director has informed that in this regard NHAI has already conducted a meeting on 07.05.2008 at Avinashi and Perumanallur and on 08.05.2008 at K.G.Chavadi. If more information required in this regard the public may contact the NHAI Office at Coimbatore. A separate wing will be formed for the acquisition of land which will consider all issues.

**Dr.N.Dharmarajan, Government Medical Officer**

It is very pleasing to know that the NHAI has come up with road widening projects. During execution of the project priority should be given for the laying of Service road so as to avoid accident. Moreover during construction of the flyovers, they may be constructed with pillar arrangement instead of earth filling.

The Project Director and the District Collector has explained that Service road will also be laid alongwith widening of NH-47. The Project Director has informed that the flyovers are designed based on the IRC guidelines. Based on the design as well as economic feasibility the flyovers have been proposed. However his views also be considered during the course of action.

**Thiru.Velusamy, Avinashi**

The District Administration shall make field inspections so as to know whether this project has been proposed via Tiruppur Cremation ground.

The Project Director has informed that a separate Public Hearing has been proposed for the Tiruppur District. During the meeting this subject will be discussed.

**Thiru.Devendran, Former Village President, Avinashi**.

Whether this Project is a finalised one.

The Project Director has informed that this project has been finalised , the tender was also called for on 27.11.2009. However, if there is any specific modification/ suggestion informed due to environmental impact, the views will be considered so as to include in this project.

**Thiru.S.Velumani, Muthugoundenpudur.**

For the implementation of this project whether compensation will be issued to the land owner immediately or compensation will be issued only after making necessary inspection and formalities.

The Project Director has informed that the compensation amount fixed by the Government will be distributed before acquisition of land and the land will be taken over only after distribution of the amount.

**Thiru.K.R.Arumugam, Avinashi**

Transport Department and District Administration may take steps to control vehicle traffic as well as noise pollution due to use of Air Horn.

It was informed that action is being taken by the Transport Department and Police Department for the above,

**Thiru.Radhakrishnan, Avinashi**

During acquisition of land for this Project farmers may lost the entire land owned by them. In view of the above proper compensation and rehabilitation shall be given for the benefit of the farmers.

The Project Director has informed that for the compensation and Rehabilitation a sum of Rs. 150.84 Crores has been allotted in this project. Hence the amount fixed by the Government will be disbursed to the farmers.

Subsequently, the District Environmental Engineer, TNPC Board has summarised and concluded the proceedings of the meeting.

Finally, the Project director has informed that this Project is one of the best project in our Country. Hence this Project will be implemented without any adverse effects on environment, without any damage to the farmers land and also the Government fixed rate will be given to the land owners without any delay so as this Project is a useful to one and all.

With this Public Hearing has come to an end.

Enclosure:

Annexure – I – List of Participants Participated in the Public Hearing

Annexure – II – Petitions received duing Public Hearing ( 71 Numbers)

Annexure – III – Views of the NHAI with reference to the objections / suggestions given by the Public in written statement.

District Environmental Engineer,
TNPC Board, Coimbatore.

District Collector,
Coimbatore District.
Coimbatore.